JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.113/2019
PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கசாமி ஐசக் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | ரமேஷ் | தொழில் | தனியார் கம்பெனி |
| கிராமம் | ஆவுடையானூர் | வயது | 29 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். என் ஊர்க்காரர். அசா.1 மாரியப்பன் என்பவரை தெரியாது. அசா.2 வைகுண்ட ராஜா என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன காளியப்பன் என்பவரை தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு வைத்தியலிங்கபுரம் பழைய ஒயின்சாப் அருகே வைத்து இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது. நான் கண்ணன், வைகுண்ட ராஜா ஆகியோருடன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். இருசக்கர வாகனத்தை கண்ணன் ஓட்டினார்.அப்போது மற்றொரு இருசக்கர வாகனத்துடன் மோதி விட்டது. நான் உடனே மயக்கம் ஆகிவிட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 04.12.2014 ம் தேதியன்று 18.15 மணியளவில் ஆவுடையானூர் வைத்திலிங்கபுரம் டாஸ்மாக் அருகே அசா.1 மாரியப்பன் வழக்கில் இறந்து போன காளியப்பன் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் மேற்காக சென்று கொண்டிருந்த போது இந்த வழக்கின் எதிரி தன்னுடைய இருசக்கர வாகனத்தில்

என்னையும், அசா.2 யும் என்பவரையும் ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும்ஓட்டி வந்து அசா.1 ன் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.113/2019
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வைகுண்டராஜா | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | செல்லத்துரை | தொழில் | தனியார் கம்பெனி |
| கிராமம் | ஆவுடையானூர் | வயது | 31 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 19.05.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது ஆவுடையானூரில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எதிரி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். ஊரில் வைத்து பார்த்துள்ளேன். அசா.1 மாரியப்பன் என்பவரை தெரியாது. சாட்சி தங்கசாமி ஐசக் என்பவரை தெரியும். வழக்கில் இறந்து போன காளியப்பன் என்பவரை தெரியாது. தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு பழைய ஒயின்சாப் அருகே வைத்து இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டது. நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். இருசக்கர வாகனங்களை யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியாது. அதில் ஒரு நபர் இறந்து விட்டதாகவும் கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 04.12.2014 ம் தேதியன்று 18.15 மணியளவில் ஆவுடையானூர் வைத்திலிங்கபுரம் டாஸ்மாக் அருகே அசா.1 மாரியப்பன் வழக்கில் இறந்து போன காளியப்பன் என்பவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் மேற்காக சென்று கொண்டிருந்த போது இந்த வழக்கின் எதிரி தன்னுடைய இருசக்கர வாகனத்தில் என்னையும், சாட்சி தங்கசாமி ஐசக் என்பவரையும் ஏற்றிக்கொண்டு

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும்ஓட்டி வந்து அசா.1ன் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi